NOVEMBER/DECEMBER 2025

FTA42/CTA42 — இலக்கணம் – 4 தண்டியலங்காரம்
(பொருளணியியல் மட்டும்)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

1. சிலேடை உவமையின் வகைகள் யாவை?
2. உபமேயம் என்றால் என்ன?
3. முன்ன விலக்கணியின் பிற பெயர்களைக் குறிப்பிடுக.
4. உருவகம் கூடி வரும் பிற அணிகள் யாவை?
5. வேற்றுமையணி - வரையறுக்க.
6. விபாவனையணி என்றால் என்ன?
7. ஏதுவணியின் வகைகள் யாவை?
8. அவநுதியணி என்றால் என்ன?
9. சங்கீரணவணி என்றால் என்ன?
10. காப்பியப் பண்பு எனச் சுட்டப்பெறும் அணி யாது?



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) உவம வழுவமைதி பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) தன்மையணியின் வகைகள் யாவை?

12. (அ) முதனிலைத் தீவகத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) பின்வருநிலையணி குறித்து விளக்குக.

13. (அ) அதிசயவணி குறித்து இயம்புக.

(அல்லது)

(ஆ) தற்குறிப்பேற்றவணி பற்றி விளக்குக.

14. (அ) அபாவத்தின் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) இலேசவணி பற்றி விளக்குக.

15. (அ) சிலேடை அணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) புணர்நிலையணி - விளக்குக.



பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

16. உவமையின் வகைகளை விரித்துரைக்க.

17. முன்ன விலக்கு அணியை விவரிக்க.

18. வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகளை விரித்துரைக்க.

19. சுவையணி - கட்டுரை வரைக.

20. விசேடவணி குறித்து எடுத்துரைக்க.
